


- வாழ்வோம்

`தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் `சாதியப் பாகுபாடு', `தீண்டாமை', `உணவுப் பழக்கத்தின் அடிப்படையிலான இழிவுபடுத்துதல்' மற்றும் `மாணவர்களை அச்சுறுத்துதல்' போன்றவற்றைத் தடுப்பதற்கான வலுவான கண்காணிப்பு நடைமுறைகளை, அரசு உருவாக்க வேண்டும்' என ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் வலியுறுத்தியுள்ளார்.

கோவையில் சாதியப் பாகுபாடு காரணமாக, தலித் மாணவர் தற்கொலை செய்துகொண்டது தொடர்பாக, அறிக்கை வெளியிட்டுள்ள அவர், ``கல்வி என்பது மனிதனைச் சிந்திக்க வைப்பதற்கும், சமத்துவத்துடன் வாழக் கற்றுக்கொடுப்பதற்குமான கருவியாகும். அத்தகைய கல்விக் கூடத்தில், ஒரு மாணவன் தனது சமூகப் பின்னணியாலும் உணவுப் பழக்கத்தாலும் அவமானப்படுத்தப் பட்டதாகக் குற்றச்சாட்டு எழுவது, மிகுந்த கண்டனத்திற்குரியது.

இனி, ஒரு மாணவர் பாதிக்கப்படக் கூடாது!

சாதியப் பாகுபாட்டிற்கு எதிராகப் பேசுவது மட்டும் போதாது; அதைத் தடுப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதற்கும், குற்றம் நிரூபிக்கப்படுபவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கும், அரசு உறுதியுடன் செயல்பட வேண்டும். மாணவர் அகிலன் விவகாரத்தில் முழு உண்மையையும் வெளிக்கொணர வேண்டும். நேர்மையான விசாரணை, குற்றம் சாட்டப்பட்டவர்கள்மீது நடவடிக்கை, பள்ளி நிர்வாகத்தின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். இனி, எந்தவொரு மாணவரும் சாதிய அவமானத்திற்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாகாத சூழலை உருவாக்கவும், தமிழ்நாடு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்' என வலியுறுத்தியுள்ளார்.

ஃப்ளாஷ்பேக்





மணிமாறன் தென்றல்

ஆறு வயதில் சீருடையில்!

1999-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில், ஊழல் வழக்குகளில் சிக்கி இருந்த அம்மையார் ஜெயலலிதா, ஒன்றிய அரசைப் பயன்படுத்தி, ஊழல் வழக்குகளில் தப்பித்துக் கொண்டிருந்த செயல்களை, மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தும் தெருமுனைப் பிரச்சார இயக்கம் நடத்தியது கழகம். அப்போது, கோவை மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளராக இருந்த என் தந்தை தென்றல் செல்வராஜ் அவர்கள் தலைமையில், பொள்ளாச்சி காந்தி சிலை அருகில், தெருமுனைப் பிரச்சாரம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்துக்கு, கழகத் தொண்டர் அணிச் சீருடையில், ஆறு வயதான என்னையும் அழைத்துச்சென்றிருந்தார். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் கழக உணர்வோடு இந்தப் படம் என்னை வழிநடத்தும்.

- மணிமாறன் தென்றல், பொள்ளாச்சி, இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர், கோவை தெற்கு.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

காவத்தின் குரல்

கம்யூனிஸ்ட்டும் தி.மு.க.வும்

முதலில் சந்தித்த இடம்!

கம்யூனிஸ்ட் இயக்கமும் திராவிட இயக்கமும் சந்திக்கும் புள்ளிகளில் ஒன்று, தேசிய இன உரிமை.

"ஒரு தேசிய இனமானது ஒரு பொதுமொழி, பிரதேசம், பொருளாதார வாழ்வு மற்றும் ஒரு பொதுப் பண்பாட்டில் வெளிப்படும் உளவியல் உணர்வு என்பவற்றின் அடிப்படையில், வரலாற்றுரீதியாகக் கட்டமைக்கப்பட்ட நிரந்தர மக்கள் சமூகம்"என்றார், ரஷ்யாவின் ஸ்டாலின். நமக்கென்று மொழி, பிரதேசம், பொருளாதார வாழ்வு, தமிழ்ப்பண்பாட்டில் வெளிப்படும் தமிழர் எனும் உணர்வு, தொன்மையான வரலாறு என அனைத்தும் உள்ளன. இப்படியாக, நாம் ஒரு தேசிய இனமாக இருக்கிறோம்.

தேசிய இனப் பிரச்சினையில் கம்யூனிஸ்ட் கட்சியும் தி.மு.க.வும் முதன்முதலில் சந்தித்த இடமாக 1955-56-இல் கிளம்பிய மொழிவாரி மாநில கோரிக்கைப் போராட்டம் அமைந்தது. அப்போது, தி.மு.க. 'திராவிட நாடு' கேட்டு வந்தது. ஆனாலும், மெட்ராஸ் மாநிலத்திலிருந்து ஆந்திரா 1953-இல் பிரிந்துபோனதும், அன்றைய நிகழ்ச்சி நிரல் மொழிவாரி மாநிலக் கோரிக்கையே என்பதை உணர்ந்து, அதை ஆதரிக்க முன்வந்தது.

இந்தியா, பல தேசிய இனங்களைக் கொண்ட நாடு. மொழிவாரி மாநிலங்களே அதற்கு ஏற்றது என்பதில், ஆரம்பம் முதல் உறுதியாக இருந்தது ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியே தவிர, காங்கிரஸ் கட்சி அல்ல. காங்கிரஸே அப்படி என்றால், ஆர்.எஸ்.எஸ்.ஸும், அதன் அரசியல் பிள்ளையாகிய ஜனசங்கமும் எப்படி இருந்திருக்கும் என்பதை நீங்கள் எளிதில் உணர்ந்துகொள்ளலாம். அவை, மாநிலங்களே கூடாது என்றன. உச்சியிலே மத்திய அரசு, கீழே உள்ளாட்சி அமைப்பு போதும், இடையிலே மாநிலங்கள் தேவை இல்லை என்றன. இந்தச் சூழலில்தான் மெட்ராஸில் தமிழர்களுக்குத் தமிழ்நாடு எனும் தனி மாநிலம் கேட்டு கடையடைப்பும், மிகப் பெரும் பேரணியும் நடந்தன. அவற்றில் கம்யூனிஸ்ட்டுகளும், தி.மு.க.வினரும் பெருந்திரளாகப் பங்கேற்றனர். அது கண்டே காங்கிரஸ் அரசு, இறங்கிவந்தது. 1956-ஆம் ஆண்டு நவம்பர் 1 அன்று, தமிழர்களுக்கான தனி மாநிலம் அமைந்தது.

இரண்டாவதாகச் சந்தித்த இடம், 'இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போர்'. இனி, ஒன்றியத்தின் அலுவல் மொழி இந்தி மட்டுமே என்று 1965-இல் காங்கிரஸ் அரசு திணித்தபோது, அதை எதிர்த்து வீரச்சமர் புரிந்தது, தி.மு.க. அதை ஆதரித்தது, 1964-இல் உதயமாகியிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி. அந்தப் போராட்டத்தில் கைதானவர்களில் மார்க்சிஸ்ட்டுகளும் உண்டு. அந்தக் களத்தில் ஏற்பட்ட நட்புணர்வுதான் 1967-இல் தி.மு.க.-மார்க்சிஸ்ட் தேர்தல் உறவாகப் பரிணமித்தது.

மூன்றாவதாகச் சந்தித்த இடம், 1975-77-இல் காங்கிரஸின் அவசரநிலைக் காட்டாட்சிக்கு எதிரான மகத்தான போராட்டம். 1976-இல் கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசைக் கலைத்தது, ஒன்றிய காங்கிரஸ் அரசு. அவசரநிலை தர்பாரைத் தமிழ்நாட்டில் எதிர்த்த கட்சிகள், தி.மு.க.வும் மார்க்சிஸ்ட் கட்சியும்தான். எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.இ.அ.தி.மு.க., அந்த ஜனநாயகப் பறிப்பை உற்சாகமாக ஆதரித்தது.

கலைஞர் ஆட்சியை காங்கிரஸ் அரசு கலைத்ததற்கு ஒரு முக்கியமான காரணம், அது 'மத்தியில் கூட்டாட்சி-மாநிலத்தில் சுயாட்சி' எனும் உரிமை முழக்கம் எழுப்பியது. மத்திய-மாநில உறவுகள் பற்றி ஆராய, அது உருவாக்கிய **ராஜமன்னார் குழு** தந்த அறிக்கைமீது தமிழ்நாடு சட்டமன்றத்தில்



1974-இல் நடந்த விவாதம் வரலாற்றுப் புகழ்பெற்றது. அதைத் தொடர்ந்து நிறை வேற்றப்பட்ட தீர்மானம், இந்தியா முழுக்க அதிர்வலையை ஏற்படுத்தியது. அதை மேலும் ஓங்கியடிக்கவைத்தது, 1977-இல் மேற்கு வங்கத்தின் தோழர் ஜோதிபாசு அரசு மாநில உரிமைகள் பற்றி உருவாக்கிய அறிக்கை.

இவையெல்லாம் நடந்து 50 ஆண்டுகள் ஆகிப்போயின. இன்றைய நிலைமை என்ன? மாநிலங்களே தேவையில்லை என்ற ஜனசங்கமானது, பா.ஜ.க. எனப் புது அவதாரம் எடுத்து, மோடி தலைமையில் ஆட்சியைப் பிடித்து, ஒரு மாமாங்கமாக நடத்திவருகிறது. ஏற்கெனவே, அரசியல் சாசனத்தில் மாநில அதிகாரங்கள் குறைவே. அவற்றை மேலும் வெட்டிச் சுருக்குகிற வேலையை அது விடாது செய்துவருகிறது.

கல்வி, வனம், கீழ்மை நீதித் துறை நிர்வாகம் உள்ளிட்ட சில இனங்களை மாநில அதிகாரப் பட்டியலிலிருந்து ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றியது, காங்கிரஸின் அவசர நிலை யதேச்சதிகார ஆட்சி. காங்கிரஸை எதிர்ப்பதாகச் சொல்லிக் கொள்ளும் பா.ஜ.க. அரசு, அதன் இந்த மோசடி வேலையை மட்டும் மிக உற்சாகமாகப் பயன்படுத்திக்கொள்கிறது. கல்வியில் ஒன்றிய அரசுக்கு அதிகாரம் வந்தவுடன், இந்தி-சமஸ்கிருதத் திணிப்பைத் தீவிரப்படுத்துகிறது. 'நீட்' எனும் நவீன தீட்டுமூலம் அடித்தட்டு மக்களின் கல்வி உரிமையை அடித்து நொறுக்குகிறது. ஜி.எஸ்.டி. எனும் வரி விதிப்பின்மூலம் மாநிலங்களின் வரி விதிப்புச் சுதந்திரம் பறிபோனது. நிதிக்காக ஒன்றிய அரசை நம்பியிருக்கும் பரிதாப நிலைக்கு மாநிலங்கள் தள்ளப்பட்டு விட்டன.

மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசுக்கு ஆளுநர் மூலம் எவ்வளவு இடையூறுகளைச் செய்தார்கள் என்பதை நாடறியும். போதாக்குறைக்கு, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பங்கு சதவிகிதத்தைக் குறைக்கிற வேலையில் மோடி அரசு இறங்கியது. அதை முறியடிப்பதில் தி.மு.க.வும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஒன்றுபட்டுக் களம் கண்டது, வரலாற்றில் பதியத்தக்கது. ஆனாலும், ஆபத்து அகலவில்லை. தமிழ்நாட்டின் தலைமீது, 'தொகுதி மறுவரையறை' எனும் அந்தக் கத்தி இன்னும் தொங்கிக்கொண்டிருக்கிறது.

மாநில உரிமை விவகாரத்தில், அவ்வப் போது வந்து கதவைத் தட்டுகிற விவகாரங்களை மட்டும் கையாண்டு பயனில்லை. இந்தியாவின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். ஒன்றியத்தில் உண்மையான கூட்டாட்சியும், மாநிலங்களில் உருப்படியான சுயாட்சியும் வர வேண்டும். அதற்கு ஏற்ப, அரசியல் சாசனத்தைத் திருத்த வேண்டும்.

அடிப்படையான திருத்தம், ஒன்றிய அரசு வலுவாக இருப்பதற்குத் தேவையான அதிகாரங்களை மட்டும் அதனிடம் இருத்தி, இதர அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தரப்பட வேண்டும். இரண்டுக்கும் பொதுவான ஒத்திசைவுப் பட்டியல் என்பது நடப்பில் ஒன்றிய அரசின் அதிகாரங்களே. எனவே, அதை நீக்க வேண்டும். அடுத்த அதி முக்கியமான திருத்தம்: ஒரு மாநிலத்திற்குத் தரப்பட்ட பிரதேசம், மக்கள் பிரதிநிதித்துவ விகிதம், நிதி அதிகாரம், மொழி உரிமை போன்றவற்றை அந்த மாநில சட்டமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் ஒன்றிய அரசு மாற்றக் கூடாது. மாநில அரசை நீக்கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கு இருக்கக் கூடாது. அது கவிழ்ந்தால், உடனே தேர்தல் நடத்த வேண்டுமே தவிர, ஆளுநர் ஆட்சி வரக்கூடாது. ஒன்றியத்தில் எப்படி குடியரசுத்தலைவர் ஆட்சி, இல்லையோ, அப்படி மாநிலத்தில் ஆளுநர் ஆட்சி கூடாது.

ஒன்றியத்தின் அலுவல் மொழியாக இந்தி மட்டுமே இருப்பது நீடிக்கும் வரை, இந்தித் திணிப்பு நடக்கும். இதனிடத்தில் எட்டாவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளும் இருத்தப்பட வேண்டும். இந்த தகவல் தொடர்பு புரட்சிக் காலத்தில், இத்தனை மொழிகளையும் ஒன்றியத்தின் அலுவல் மொழிகளாக்குவது எளிதான செயலே. ஐரோப்பிய ஒன்றிய அரசில் 24 மொழிகள் அலுவல் மொழிகளாக உள்ளன.



இந்தியாவின் தேசிய இனப் பிரச்சினைக்கு இத்தகைய ஜனநாயகத் தீர்வை முன்வைப்பதில், இன்று கைகோர்க்கக்கூடிய கட்சிகள், தி.மு.க.வும் கம்யூனிஸ்ட்டு கட்சிகளும்தான். இவற்றுக் கிடையிலான இந்தக் கொள்கைப் பொதுமையின் அடிப்படையில் பிற கட்சிகளை நோக்கலாம், ஈர்க்கலாம். கேள்விகள் இவையே:

ஒன்றியத்தில் உண்மையான கூட்டாட்சியையும், மாநிலங்களில் உருப்படியான சுயாட்சியையும் தரும் வகையில், அரசியல் சாசனத்தைத் திருத்த ஒப்புக்கொள்கிறீர்களா? ஒன்றியத்தில் தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளை அலுவல் மொழிகளாக்க ஒப்புக்கொள்கிறீர்களா?

இவற்றுக்கு 'ஆம்' என்பவை நட்புக் கட்சிகள், 'இல்லை' என்பவை எதிரிக்கட்சிகள். களம் இப்படியாகத் தீர்மானமாகும்; உரிமைப் போர் இப்படியாகத் துவங்கும். வெறும் பேச்சளவில் அல்ல, செயலளவில் அது நடக்கும். ■

அருணன்

தெரிந்து கொள்வோம்

1957 சிவாஜி கணேசனின் `கட்டபொம்மன்' நாடகம் அரங்கேற்றம் - அண்ணா பாராட்டு.

1957 கழக வேட்பாளர்களுக்கு, `உதயசூரியன்' சின்னம் ஒதுக்க அண்ணா கோரிக்கை.

1958 தஞ்சை எஸ்.எம்.டி. பஸ்-தொழிலாளர் வேலை நிறுத்தம்.

1958 `சிகாகோ டெய்லி டைம்ஸ்' ஏட்டுக்கு, பேரறிஞர் அண்ணா பேட்டி.

1977 கழகத்தின் துணை அணியான இலக்கிய அணி உருவாக்கம்.

1978 திருச்சியில், கழகம் நடத்திய இந்தி எதிர்ப்பு மாநாடு.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900